மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டத்தின் மதிப்பீடு 40 ஆயிரம் என்று போடப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியாளரின் அனுமதியைப் பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

சேக்கனூர் ஏரி

*255 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடார்க்காடு மாவட்டத்தில், வேலூர் தாலுக்காவைச் சார்ந்த சேக்கனூர் ஏரி எப்பொழுது பழுது பார்க்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேக்கனூர் ஏரி 1961-62ம் ஆண்டில் பழுது பார்க்கப்பட்டது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : 1961–62-ஆம் ஆண்டிற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் ஏன் அந்த ஏரி பழுதுபார்க்கப் படவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப் பழுது பார்க்கும் திட்டத்திற்கு 20 ஆயிரம் மதிப்பீட்டில் ஒரு செயற் குறிப்பு ஆட்சித் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

குறளகத்தில் உள்ள அங்காடி

*256 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை குறளகத்தில் இயங்கும் கதர்-கிராமக் கைத்தொழில் அங்காடி இலாபத்தில் நடைபெறுகிறதா ?

(இ) ஆம் எனில், 1971-72-ம் ஆண்டில் அங்கு விற்பனையான பொருள்களின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம். 1969-70-லும் லாபம் வந்திருக்கிறது. 1970-71–லும்லாபம் வந்திருக்கிறது.

(இ) 1971-72–இல் விற்பனையான பொருள்களின் மதிப்பு ரூ. 44 லட்சம்.

திரு. என். கிட்டப்பா : 1971-72-ஆம் ஆண்டில் அங்கு விற்பனையான பொருள்களின் மதிப்புக்கு ஏற்ப நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய மொத்த லாப வருமானம் எவ்வளவு ? இப்படி வருமானம் வரக்கூடிய இந்தத் துறையை விஸ்தரிக்க செயற் குறிப்பு இருக்கிறதா ?